www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்

## LIBERATION TIGERS OF THAMIL EALAM

19.06.1985.

**போர் நிறுத்தம் இலங்கை அரசுக்கு விடுதலைப்புலிகள் கடும் ஆட்சேபம்.**

போர் நிறுத்தம் சம்பந்தமாக இலங்கை அரசு விடுத்துள்ள அறிக்கைக்கு திரு.வே.பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இலங்கையில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு.லலித்அத்துலத்முதலி நேற்று விடுத்த அறிக்கையில் இராணுவத் தோல்வியின் காரணமாகவே விடுதலைப்புலிகள் இயக்கம் ஆயுதங்களை கீழே போட்டுவிட இணங்கி இருக்கிறது என்ற ஒரு அபாண்டப் பொய்ப்பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார். இது உண்மைக்கு முற்றிலும் மாறான விசமத்தனமான பொய்யாகும். விடுதலைப்புலிகள் தமது சமீபத்திய போர் நடவடிக்கைகளில் பெரும் வெற்றிகளை ஈட்டியதுடன் எவ்வித உயிரிழப்புகளையும் சந்திக்கவில்லை. உண்மை இவ்விதம் இருக்க இலங்கை அரசு மிகக் கீழ்த்தரமான பொய்ப்பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறது. எமது விடுதலை இயக்கத்தை அவமானப்படுத்துவதுடன் தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி அவர்களின் மன உறுதியை உடைப்பதும் இப்பிரச்சாரத்தின் நோக்கமாகும்.

போர் நிறுத்தம் அல்லது வன்முறைச்செயல்களை நிறுத்துவது சம்பந்தமாக நாம் இலங்கை அரசுக்கு பல நிபந்தனைகளை முன்வைத்திருக்கிறோம். நாம் முன்வைத்த நிபந்தனைகளை இலங்கை அரசு காலம் தாழ்த்தாமல் நிறைவேற்றும் பட்சத்தில்தான் நாம் யுத்த நிறுத்தம் பற்றி இறுதி முடிவு எடுப்போம். யுத்த நிறுத்தம் அல்லது வன்முறைச் செயல்களை நிறுத்துவது என்பது ஆயுதங்களைக் கீழே போடுவதோ, அல்லது ஆயுதப் போரைக் கைவிடுவதோ அல்ல என்பதை இலங்கை அரசுக்கு இடித்துரைக்க விரும்புகிறோம். நாம் எமது இலட்சியத்தை அடையும் வரை ஆயுதங்களைப் போடமாட்டோம் என்பதை உறுதியாகக் கூறவிரும்புகிறோம். இலங்கை அரசானது தனது மூர்க்கத்தனமான இராணுவப் பாதையைக் கைவிடவேண்டும், என்ற நோக்கில் இந்திய அரசு நல்லெண்ண சமரச முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சிகளுக்கு நாம் எம்மாலான ஒத்துழைப்பைக் கொடுத்து வருகிறோம். ஆனால் இலங்கை அரசு இவ்விதமான ஆத்திரமூட்டும் அறிக்கைகள் வெளியிடுவது இந்தியாவின் நல்லெண்ண முயற்சிகளுக்கு பாதகமாக அமையுமென இலங்கை அமைச்சருக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

எல்.சுப்பிரமணியம்.

அரசியல் குழு

தமிழீழ விடுதலைப்புலிகள்.

( இப்பத்திரிகை அறிக்கை இலண்டனில் மறுவிநியோகம் செய்யப்படுகிறது. )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்